# காலத்தில் வாழும் வாக்கியங்களை உருவாக்கிய முதலமைச்சர்!

மனித இனம் எப்போது பேச ஆரம்பித்தது என்பது குறித்து, தெளிவான ஆய்வு முடிவுகள் இதுவரை வெளிவரவில்லை. அதே மாதிரி எழுத்துகளை எப்போது உருவாக்கினார்கள் என்பது குறித்தும் இறுதியான ஆய்வு முடிவுகள் வெளியிடப்படவில்லை. உலகின் மூத்த மொழிகளாக, ஹீப்ரு, சீனம், சமஸ்கிருதம், தமிழ் என்று இறுதி செய்யப்பட்டுள்ளன. சைகை மொழியிலிருந்து ஒழுங்கற்ற ஒலிகளின் வழியே தகவல் பரிமாற்றத்தை மேற்கொண்டு ஓரளவு சொற்களின் ஒழுங்கமைவிற்கு வந்த பிறகு பேச ஆரம்பித்த மனிதன், பேச்சை ஒரு கலையாக வளர்த்தெடுத்தான். பேச்சால் உலக அளவில் புகழ்பெற்றவர்கள் என்று பலரைக் குறிப்பிட முடியும்.

ஹிட்லர்கூட சிறந்த பேச்சாளர் என்று சொல்லப்படுகிறது. தற்போது தமிழ்நாட்டில் பட்டிமன்றங்கள் நடப்பதுகூட, பேச்சுக் கலையின் ஒரு வடிவம்தான். தமிழ்நாட்டில் அண்ணாவும், கலைஞரும் பேச்சுக் கலைக்கு வடிவமும் உயிரும் கொடுத்தவர்கள். பேச்சு ஒரு கலை வடிவமாக மாறுவதற்குப் பாதை அமைத்துத் தந்தவர்கள்.

மனிதர்கள் பிறந்ததிலிருந்து சாகும்வரை பேசிக்கொண்டேதான் இருக்கிறார்கள். ஒரு மனிதன் தன் வாழ்நாளில் எவ்வளவு வார்த்தைகளைப் பேசியிருப்பான்? கணக்கிட முடியாது. ஒரு மனிதன் தன் வாழ்நாளில் பேசுகிற வார்த்தைகளில் எவ்வளவு அர்த்தமுள்ளது, எவ்வளவு அர்த்தமற்றது என்பதை பிரித்துப்பார்க்கவும் முடியாது. எண்ணிப் பார்க்கவும் முடியாது. பேசிய வார்த்தைகளில் எத்தனை வார்த்தைகள் நினைவில் இருக்கும், தெரியாது, பேச்சிலேயே சிறந்த பேச்சு, பேசாமல் இருப்பதுதான். வார்த்தைகளைக் குறைத்துப் பேசுவதும், தேர்ந்தெடுத்துப் பேசுவதும் முக்கியமானது. பேசுகிற வார்த்தைகளைவிட பேசாத வார்த்தைகளுக்குத்தான் மதிப்பு அதிகம்.

உலகிலேயே சிறந்த மொழி, மௌனம்தான். பேச வேண்டிய இடத்தில் பேச வேண்டும். பேச தேவையில்லாத இடத்தில் பேசாமல் இருப்பது சிறந்தது. பேச்சுக் கலைக்கு இப்படிப் பல விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. அதே மாதிரி எழுதுவதற்கும் பல விளக்கங்கள் நேர்த்தியாக எழுதுவது, குறைவாக, தெளிவாக, கருத்துப்பிழையில்லாமல் எழுதுவது என்று சொல்லப்படுகின்றன.

மனிதர்கள் அதிகம் செலவழிப்பது வார்த்தைகளாக இருக்கிறது. பணத்தை எண்ணிஎண்ணி செலவு செய்கிறார்கள். வார்த்தைகளை மட்டும் எண்ணாமல், சிந்திக்காமல் செலவு செய்கிறார்கள். காரணமே இல்லாமல் மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். எந்தக் கடையில் சாப்பிட வேண்டும், எந்தக் கடையில் சாப்பிடக் கூடாது, எந்தக் கடையில் துணி எடுக்க வேண்டும், எந்தக் கடையில் துணி எடுக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறவர்கள், பேச்சு என்று வரும்போது கவனமாக இருப்பதில்லை. யாரிடம் என்ன பேசுகிறோம் என்பதையும், எந்தச் சூழ்நிலையில் பேசுகிறோம் என்பதையும் மறந்துவிடுகிறார்கள். சாதாரணமாக இருக்கும்போது பேசுகிற வார்த்தைகளுக்கும், கோபத்திலிருக்கும் போது பேசுகிற வார்த்தைகளுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. அன்பாக இருக்கிற நேரத்தில் பேசுகிற வார்த்தைகளைவிட கோபத்தில் பேசுகிற வார்த்தைகளைத்தான் பலரும் நினைவில் வைத்திருக்கிறார்கள். வாயில் வருவதையெல்லாம் பேசுவது, பேச்சு அல்ல. வார்த்தைகள் அல்ல. தேர்ந்தெடுத்து, யோசித்து, திட்டமிட்டு வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற அக்கறை 90% பேரிடம் இல்லை. அதை ஒரு குற்றமாகவும் கருத முடியாது.

பொதுவாக மனிதர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது என்பது தனிப்பட்ட வாழ்க்கை சார்ந்து மட்டுமே இருக்கிறது. சமூகம் சார்ந்து பேசுகிறவர்கள் அரிது. அதிகம் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசுவது அரிது. அதனினும் எழுத்தாளர்கள் எழுதும்போது மட்டும்தான் வார்த்தைகளின் மீது அக்கறை கொண்டிருப்பார்கள். பேசும்போது அப்படி இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. பொதுவாக மனிதர்கள் பேசிக்கொள்வது இயல்பானதாக இல்லாமல் செயற்கையாகவே இருக்கும். இவன் பொய் சொல்கிறான், இவன் நடிக்கிறான் என்ற விதத்தில்தான் இருக்கும்.



கவிஞர்கள் கவிதையைப் பற்றியும், பொருளாதார அறிஞர்கள் பொருளாதாரத்தைப் பற்றியும், அறிவியல் அறிஞர்கள், கல்வியாளர்கள், கல்வெட்டியல், தொல்லியல் அறிஞர்கள் அந்தந்த துறை சார்ந்தவற்றை மட்டுமே பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களும் எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். யார் என்ன பேசினாலும், எழுதினாலும் ஒருசிலர் பேசுவதும், எழுதுவதும் மட்டுமே மக்களால் திரும்பத்திரும்ப நினைவுகூரப்படுகின்றன, மேற்கோள்கள் காட்டப்படுகின்றன. ரூசோ, வால்டேர், பெர்னாட்ஷா, தாகூர், காந்தி, அம்பேத்கர், ஷேக்ஸ்பியர், நேரு, பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற பலர் சொன்னது, எழுதியது மட்டுமே சமூகத்தின் அனைத்துத் தரப்பினராலும், காலம்கடந்தும் நினைவு கொள்ளப்படுகின்றன.

வெற்று முழக்கங்களை, வசனங்களை உருவாக்குவது எளிது. அப்படி உருவாக்கப்படும் முழக்கங்கள், அந்தந்தக் கணத்தில் தோன்றி மறைந்துவிடும். எக்காலத்துக்குமான, எல்லா மக்களுக்குமான வாக்கியங்களை உருவாக்குவது எளிதல்ல. சமூகத்தின் மீது அக்கறைக் கொண்டவர்கள் பேசுவதும், எழுதுவதும் மட்டுமே காலத்தில் நிற்கின்றன. அரசியல் மேடையாக இருந்தாலும், பள்ளி, கல்லூரி, பட்டிமன்றம் என்று எதுவாக இருந்தாலும், எல்லா மேடைகளிலும் மேற்கோள் காட்டப்படும் வாக்கியங்களை உருவாக்குவதும், அப்படி உருவாக்கப்பட்ட வாக்கியங்கள் காலம் கடந்து நிற்பதும் எளிய காரியமல்ல. காலத்தில் கரைந்து போகாத, மங்கி வலுவிழந்து போகாத, என்றும் அர்த்தம் தரக்கூடிய பல்துறை சார்ந்தும் பல வாக்கியங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் உருவாக்கியிருக்கிறார்.

**18ஆம் நூற்றாண்டிலிருந்தே 'திராவிடம்' என்ற சொல், அரசியல் களத்தில் அதிகமாகப் புழக்கத்திலிருக்கிறது. 'திராவிட மரபு' குறித்து, 'திராவிட மொழி குடும்பம்' குறித்து பல நூற்றாண்டுகளாகப் பேச்சு இருந்துவருகிறது. 'திராவிடம்', திராவிட இனத்தவரின் தனித்தன்மை குறித்துப் பலர் பேசியிருக்கிறார்கள். மொழியியல் வல்லுநர்கள், பெரியார், அண்ணா, கலைஞர் போன்றவர்களும் பேசியிருக்கிறார்கள். திராவிடம், திராவிடர் என்ற சொல் யாரைப் பற்றிப் பேசுகிறது? எந்த அடையாளத்தை முன்னிறுத்துகிறது? 'திராவிட மாடல்' என்ற புதிய சொல்லாட்சியை முதல்வர் மு.க. ஸ்டாலின் உருவாகியிருக்கிறார். 'திராவிடம்' என்பது என்ன, அது பேசுகிற அரசியல் பண்பாட்டைப் பற்றியும் முதல்வர் மு.க.ஸ்டாலின் புதிதாக வாக்கியங்கள் பலவற்றை உருவாக்கி இருக்கிறார். உலகிலேயே மிகவும் கடினமானது காலத்தால் அழியாத சொற்களை உருவாக்குவதுதான்.**

'உயர்ந்தவர் தாழ்ந்தவர்' என பிரிப்பதுதான் ஆரிய மாடல். இதற்கு நேர் எதிரானது திராவிட மாடல்."

" 'திராவிடம்' என்ற சொல் ஒரு காலத்தில் இடத்தின் பெயராக, இனத்தின் பெயராக, மொழியின் பெயராக வழங்கப்பட்டு வந்திருந்தாலும், இன்று 'திராவிடம்' என்றால் அது ஒரு அரசியல் தத்துவத்தின் பெயராக இருக்கிறது."

"'திராவிட மாடல்' என்பது எதையும் இடிக்காது, உருவாக்கும்.

எதையும் சிதைக்காது, சீர் செய்யும்.

யாரையும் பிரிக்காது, அனைவரையும் ஒன்றுசேர்க்கும்.

யாரையும் தாழ்த்தாது, அனைவரையும் சமமாக நடத்தும்.

யாரையும் புறக்கணிக்காது, தோளோடு தோள் நின்று அரவணைக்கும்."

"இரத்த பேதம் கூடாது, பால் பேதம் கூடாது என்பதுதான் திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை."

"திராவிட இயக்கத்தில் அடிப்படைக் கொள்கை என்பது சாதி ஒழிப்பும் பெண்ணுரிமையும்தான்."

"திராவிடம் என்றால் தமிழ் உணர்வு, பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதி, மனிதநேயம்.

திராவிடம் என்றால் அனைவருக்கும், அனைத்தும் என்ற இலட்சியத்தை நோக்கியப் பயணம்."

"சமத்துவத்திற்கு எதிராக இருக்கக்கூடியவர்களுக்குத்

திராவிடம் என்ற சொல் எரிச்சலாக இருக்கிறது."

உலகில் தோன்றிய மொழிகளில் தமிழும் ஒன்று. மூத்த மொழிகள் என்று சொல்லப்படுவதில் இன்று பல மொழிகள் புழக்கத்தில் இல்லை. ஆனால், தமிழ்மொழி மட்டும்

எழுத்தாளர்
**இமையம்**



தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை மக்கள் பேசும் மொழியாகவும், இலக்கிய, இலக்கண, செம்மொழியாகவும் இருக்கிறது. எத்தனையோ படையெடுப்புகள், அரசு நிர்வாக மாற்றம், மொழித் திணிப்பு, மொழி அழிப்பு, மொழி ஆதிக்கம் என்பதோடு அரசியல் நெருக்கடிகள், பொருளாதார நெருக்கடிகள் என்று கொடுத்தும்கூட தமிழ் மொழி இன்றும் உயிரோடு இருக்கிறது. இளமையோடு இருக்கிறது.

உலகில் எந்த நாட்டினரைவிடவும், தமிழர்கள் கூடுதலான மொழிப்பற்றுக் கொண்டவர்கள் என்பது உலகம் அறிந்த ஒன்று. நீதிக் கட்சியினரும், திராவிடர் கழகத்தினரும் தி.மு.க.வினரும் மொழியை முதன்மைப்படுத்தி அரசியலைக் கட்டமைத்தவர்கள். அண்ணாவும் கலைஞரும் தமிழை முதன்மையான பண்பட்டுக் கருவியாக மாற்றியவர்கள். இந்திஎதிர்ப்புப்போராட்டத்தைமுன்னெடுத்தவர்கள். அவர்கள் மரபில் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் மொழி குறித்து என்ன பேசினார், எழுதினார்?

"தமிழால் நாம் இணைந்தால் நம்மை

மதத்தால், சாதியால் பிரிக்க முடியாது."

"தமிழ் வாழ்க என்று சொல்வதால் நாம் மற்ற மொழிக்காரர்களுக்கு எதிரிகள் அல்ல.

தமிழன் என்று சொல்வதால் மற்ற தேசிய இனத்தவர்களுக்கு நாம் எதிரிகள் அல்ல."

"எந்த நாட்டில் வாழ்ந்தாலும் நமது தாய் மண்ணை மறந்துவிடாதீர்கள்

என்பதே தமிழர்களுக்கு நான் வைக்கும் வேண்டுகோள்."

"எவ்வளவு உயரமாக மரம் வளர்ந்தாலும் தன்னுடைய வேர்களை விட்டுவிடுவதில்லை என்பதைப் போல தமிழையும், தமிழ்நாட்டையும் விட்டுவிடாதீர்கள்."

"நம்மை ஒற்றுமைப்படுத்தும் ஆற்றல் நம் மொழிக்கு உண்டு."

"தமிழரை வளர்த்து தமிழைப் போற்றுவோம்."

இந்தியாவில் இருக்கிற கட்சிகளில் முதன்மையான கட்சி தி.மு.க. 75 ஆண்டுகளைக் கடந்தும் வலிமையோடு இருக்கிற கட்சியின் தலைவராக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிற தான் எப்படிப்பட்டவன், எந்தக் கொள்கையால் வளர்க்கப்பட்டவன், எந்தக் கொள்கையின் அடிப்படையில் கட்சியை வழிநடத்துகிறேன், ஆட்சியை எந்த லட்சிய நோக்கத்தின் அடிப்படையில் நடத்துகிறேன் என்பதை மிகவும் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் 'சில சொற்களில்' சொல்லியிருக்கிறார். அவர் சொன்ன சில வார்த்தைகளே அவர் யார் என்பதைச் சொல்லிவிடுகிறது. அந்த வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் அல்ல என்பதைக் காலம் நிரூபிக்கும்.

**"கழகம்தான் என் களம். திராவிடம்தான் என் உயிர்க் கொள்கை. தமிழ்நாட்டுக்குச் செய்யும் நன்மையே எனது அன்றாடப் பணி. சிறு வயதிலிருந்தே நான் என்னை இப்படித்தான் வடிவமைத்துக்கொண்டேன்."**

**"சுயமரியாதைக் கொள்கையில் தந்தை பெரியார்,**

**இனமான எழுச்சியில் அண்ணா,**

**இயக்கத்தை வழிநடத்துவதில் கலைஞர்,**

**மொழி உரிமையில் இனமானப் பேராசிரியர் இவர்கள்தான் என்னை செதுக்கிய சிற்பிகள்."**

**"சமூக நீதி என்பது திராவிட இயக்கம் இந்த நாட்டுக்குக் கொடுத்த மிக முக்கியமான கொடையாகும்."**

**"உங்களில் ஒருவன், உங்களோடு ஒருவன்"**

**"கறுப்பும் சிவப்புமான அந்த இரு வண்ணக்கொடிதான் நமக்கான அடையாளம்."**

என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் சொல்லியிருப்பது நான் என்றும் மக்களுடன் நிற்பவன் என்ற பொருளில்தான். தி.மு.க.வின் அடிப்படை கொள்கைகள் என்ன என்பதை மு.க.ஸ்டாலின் இப்படி வரையறுத்திருக்கிறார்.

"சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடிப்படையில்நிற்கும்இயக்கம்தான்திராவிட முன்னேற்றக் கழகம்."

"நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நீதிக் கட்சியின் ஆட்சி போட்ட விதைதான் சமூக நீதி."

முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ள பெரியார், அண்ணா, கலைஞர் இவர்கள் கடவுள்கள் அல்ல, மனிதர்கள். தமிழ்நாடு வளர வேண்டும். உயர வேண்டும் என்ற லட்சியத்திற்காகப் போராடியவர்கள். சமூக மேம்பாட்டிற்காக யார் போராடினார்களோ, ஒரு நூற்றாண்டு காலம் தமிழ் நாட்டை மறுஉருவாக்கம் யார் செய்தார்களோ, அவர்கள்தான் தன்னை உருவாக்கிய, செதுக்கிய சிற்பிகள் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு, வெற்று அறிவிப்பல்ல. அவர் தனக்கு வழிகாட்டிகளாக அடையாளப் படுத்திய மனிதர்கள் சாதாரணமானவர்கள் அல்ல.

தொடர்ச்சி நாளை



புதுக்கோட்டை மாநகராட்சி, ஆரோக்கிய மாதா மக்கள் மன்றத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவினை, அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் துவக்கி வைத்து, மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.16 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் எருமப்பட்டி ஒன்றியக் கழகச் செயலாளர் பி.பாலசுப்பிரமணியம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், மேகலா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தொடர் மழையிலும், மூன்று நாட்களில் 1831 - மாணவ - மாணவிகளுக்கு

## ரூ.82 இலட்சத்து 94 ஆயிரத்து 430 மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்!

### பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம், பிரபாகரன் வழங்கினார்!

*பெரம்பலூர்,டிச, 8- தமிழக அரசின் திட்டங்கள் உடனடியாக பயனாளிகளுக்கு சென்று சேர வேண்டும் எனும் நோக்கில், தமிழக அரசின் முத்தான திட்டங்களும் ஒன்றான மாணவ, மாணவி களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தொடர் மழையிலும் 1831 மாணவ- மாணவிகளுக்கு 28-11-2025, 01-12-2025, 02-12-2025 ஆகிய மூன்று நாட்களில் ரூ.82 இலட்சத்து 94 ஆயிரத்து நானூற்று முப்பது மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகளை பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் வழங்கினார்.*

*வேப்பந்தட்டை அரசினர் மேல்நிலைப்பள்ளி, வெங்கலம் அரசினர் மேல்நிலைப்பள்ளி, அரும்பாவூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி, பூலாம்பாடி அரசினர் மேல்நிலைப்பள்ளி , புனித தோமினிக் பெண்கள் மேல்நிலைப்பள்ளி,*

*எளம்பலூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, கவுல்பாளையம் அரசினர் மேல்நிலைப்பள்ளி , சிறுவாச்சூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி, சத்திரமனை அரசினர் மேல்நிலைப்பள்ளி, களரம்பட்டி ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி,*

*அம்மாபாளையம் அரசினர் மேல்நிலைப்பள்ளி , மேலப்புலியூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி , எசனை அரசினர் மேல்நிலைப்பள்ளி , அனுக்கூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி , ரஞ்சன்குடி அரசினர் மேல்நிலைப்பள்ளி , அன்னமங்கலம் சிறுமலர் மேல்நிலைப் பள்ளி , நெற்குணம் அரசினர் மேல்நிலைப்பள்ளி , கை. களத்தூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி , வ. களத்தூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி , செட்டிக்குளம் அரசினர் மேல்நிலைப்பள்ளி ,*

*நக்கசேலம் அரசினர் மேல்நிலைப்பள்ளி , தேனூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி , நத்தக்காடு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் பயன் பெறும் வகையில் இலவச மிதிவண்டிகள் வழங்கப் பட்டது.*

*இந்த நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன், மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மை நல அலுவலர் சுரேஷ்குமார், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாவட்ட துணை செயலாளர்கள் டி. சி. பாஸ்கர் நூருல்ஹிதா இஸ்மாயில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் - பெரம்பலூர் ஒன்றிய கழக செயலாளர் எம். ராஜ்குமார், வேப்பந் தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செ.நல்ல தம்பி வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ந. ஜெகதீஸ்வரன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் மருத்துவர் செ. வல்லபன் மற்றும் ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள், மாணவிகள், அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

### திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர்

## பூண்டி கே.கலைவாணன் சகோதரி திருமதி பா.கலைவாணி மறைவு!

### முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச.8-**

**திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணனின் சகோதரி திருமதி பா. கலைவாணி அம்மையார் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2025) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

தகவல் அறிந்து துயருற்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த செய்தியில்,

"மறைந்த பூண்டி கே.கலைச்செல்வம், திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன், (நினைவில் வாழும்) பூண்டி கே.கலையரசன் ஆகியோரின் சகோதரியும் - (நினைவில் வாழும்) ஜி.பாண்டி துரை அவர்களின் துணைவியாருமான திருமதி. பா.கலைவாணி அம்மையார் அவர்கள், நேற்று இயற்கை எய்தினார் எனும் செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

கலைவாணி அம்மையார் அவர்களின் மறைவால் ஆற்றொணாத் துயருறும் அவரது புதல்வர்களான சுந்தரேஷ்வரன், விக்னேஷ்வரன், சகோதரர் – மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், அவரது உறவி னர்களுக்கும் எனது ஆறுதலையும் – அன்னாரின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



திருப்பனந்தாளை சேர்ந்த மருத்துவ படிப்பு மேற்கொள்ளும் மாணவியின் பெற்றோரிடம் அமைச்சர் கோவி.செழியன் நிதி உதவி வழங்கினார். உடன் திருப்பனந்தாள் மேற்கு ஒன்றிய செயலாளர் கோ.க.அண்ணாதுரை, தஞ்சாவூர் வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் செல்வகுமார், கட்சி நிர்வாகி ஸ்டாலின் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.